**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | புவியியல் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல் :
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் இரு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
- உலகப்படம் ஒன்று வழங்கப்படும்.

## பகுதி - I
## (பௌதிகப் புவியியல்)

01) (i) புவியின் உட்பாக ஆய்வின் அடிப்படையில் அதன் ஐந்து படையமைப்புக்களினை பெயரிடுக. (5 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட படை அமைப்புகளினை வரிப்படம் ஒன்றில் குறித்துக்காட்டுக. (5 புள்ளிகள்)

(iii) புவியின் உட்பகுதியில் இடம்பெறும் செயற்பாடுகள் காரணமாக நடைபெறும் எரிமலைச் செயன்முறைகளை உதாரணத்துடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) எரிமலைச் செயற்பாடுகளால் உருவாகின்ற நில உருவங்களை புனையாவரிப் படங்களின் உதவியுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

02) (i) புவியோட்டில் தொழிற்படும் நான்கு தின்னல் கருவிகளினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) தின்னற் கருவிகளின் பிரதான மூன்று செயற்பாடுகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) பாலைவனப் பிரதேசங்களில் காற்றின் அரித்தல் செயன்முறைகளினை விளக்குக. (7 புள்ளிகள்)

(iv) பாலைவனப் பிரதேசங்களில் காணப்படும் அரித்தலுக்குரிய மூன்று நில உருவங்களின் உருவாக்கத்தினை வரிப்படங்களின் உதவியுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

03) (i) இலங்கையில் அதிகளவு பாதிப்பினை ஏற்படுத்தும் இரு இயற்கை அனர்த்தங்களினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட ஏதாவதொரு இயற்கை அனர்த்தத்தின் உருவாக்கத்திற்கு பங்களிக்கும் இரு மனித நடவடிக்கைகளினை பரிசீலிக்க. (6 புள்ளிகள்)

(iii) இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் சமூக, பொருளாதார, சூழலியல் விளைவுகள் நான்கினை உதாரணத்துடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) இலங்கையில் இயற்கை அனர்த்தங்களின் அளவினை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளப் பட்டுவரும் நான்கு நடவடிக்கைகளினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

04) (i) பச்சைவீட்டு வாயுக்கள் நான்கினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(ii) பச்சைவீட்டு வாயுக்களைத் தோற்றுவிக்கும் இரு மனித நடவடிக்கைகளினையும் இரு இயற்கை தோற்றப்பாட்டினையும் குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) பச்சைவீட்டு வாயுக்களின் செறிவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் ஏற்படும் விளைவுகள் நான்கினை விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) உலக காலநிலை மாற்றங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி - II

## (மானிடப் புவியியல்)

05) (i) தரப்பட்ட உலகப்புறவுருவப் படத்தில் உயர்குடித்தொகை அடர்த்தி கொண்ட இரு பிரதேசங்களையும், குடியடர்த்தி குறைந்த இரு பிரதேசங்களினையும் குறித்துப் பெயரிடுக. (4 புள்ளிகள்)

(ii) உலக குடியடர்த்தி வேறுபாட்டினைத் தீர்மானிக்கும் பௌதிக, மானிட காரணிகள் மூன்றினை உதாரணத்துடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) சனத்தொகையில் முதியோரின் சதவீதம் அதிகரித்து வருவதால் வளர்முக நாடுகளில் ஏற்படக்கூடிய மூன்று பிரச்சினைகளினை விபரிக்குக. (4 புள்ளிகள்)

(iv) இலங்கையில் முதியோர் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மூன்றினை பரிசீலிக்க. (6 புள்ளிகள்)

06) (i) “நகரமயமாதல்” என்பதனைச் சுருக்கமாக விபரிக்க. (4 புள்ளிகள்)

(ii) உலக நகரமயமாதலின் நான்கு முனைப்பான பண்புகளினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) ஆசியா அல்லது தென்னமெரிக்கா நகரம் ஒன்றினை உதாரணமாகக் கொண்டு அந்நகரத்தில் எழக்கூடிய மூன்று நகராக்கப் பிரச்சினைகளினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iv) நகரமயமாதல் தொடர்பான பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய மூன்று உபாயங்களை விளக்குக. (6 புள்ளிகள்)

07) (i) கீழே தரப்பட்டிருக்கும் கைத்தொழில் மையங்கள் காணப்படும் நாடுகளினை இனங்கண்டு பெயரிடுக. (4 புள்ளிகள்)
(ஹம்பேர்க், டோக்கியோ, பெங்களூர், ருலூஸ் உல்சான், குவான்சூ, லொஸ்ஏஞ்சல், மொன்றியல்)

(ii) விமான உற்பத்திக் கைத்தொழிலின் இடவமைவினை தீர்மானிக்கும் மூன்று காரணிகளை உதாரணத்துடன் விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iii) உலக விமான உற்பத்திக் கைத்தொழிலின் புதிய போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) உலக உற்பத்திக் கைத்தொழில் தொடர்பான மூன்று பிரச்சினைகளினை ஏதாவதொரு உற்பத்திக் கைத்தொழிலினை உதாரணமாகக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

08) (i) இலங்கையில் விவசாய உற்பத்தி பொருளாதார மத்திய நிலையங்கள் காணப்படும் மூன்று இடங்களினைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) மேலே நீர் குறிப்பிட்ட விவசாய உற்பத்தி பொருளாதார மத்திய நிலையங்களின் நோக்கங்கள் மூன்றினை விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) இலங்கையின் விவசாய நிலப்பரப்பினை அதிகரிக்க மேற்கொண்ட இரு நடவடிக்கைகளினை விபரிக்க. (5 புள்ளிகள்)

(iv) இலங்கையின் விவசாயம் நவீனமயப்படுத்தப்பட்டமையால் ஏற்படும் மூன்று விளைவுகளை விளக்குக. (6 புள்ளிகள்)